சட்டமன்றத்தில் இது பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதை மனத்தில் இறுத்தி மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களை அணுகுமாறு அதிகாரிகளிடம் சொல்கிறேன். சிமெண்டை விரைவிலே பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்.

தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதி

*வினா எண் 133—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களிடம் இருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதியில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு கடன் கொடுக்கப்படுவது போல் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கடன் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வைப்பு நிதியில் இதுவரையில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு மட்டும் கடன் கொடுக்கப்படுகிறது. அதை தொழிலாளர்களின் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 9—2—80-லிருந்து ஆண்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. அதனால்தான் விடையிலே ‘ ஆம் ’ என்று சொன்னேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களின் ஆண் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய கடனுக்காக வைப்பு நிதி அலுவலகத்தில் லோன் கேட்டு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு விண்ணப்பித்தும்கூட திருமணம் முடிக்கப்படும் நேரம் வரையில் அந்த லோன் கிடைக்கப்படுவதில்லை ; அதற்குப் பிறகு பின்னால் கூட கிடைக்கப்படுவதில்லை. எனவே, தவிர்க்க முடியாத காரணத்தால் வேறு சில இடங்களில் கடனைப் பெற்றுத் திருமணத்தை முடித்து விடுகிறார்கள்.

(முற்பகல் 9—50)

அதிலே, பின்னர் கேட்டால்கூடக் கொடுக்கப்படுவதில்லை. எப்படி இருந்தாலும், அந்தத் திருமணக் கடன் கேட்டபிறகு, திருமணத்திற்கு முன்னால் கடன் கொடுக்க முடியாவிட்டாலும் திருமணம் முடிந்ததற்குப் பின்னாலாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னதாகவே கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு வலியுறுத்தும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. திருமணத்திற்கு ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்பே திருமணப் பத்திரிகை உட்பட சேர்த்து அனுப்பி வைத்தால்கூட, திருமணம் முடிந்து இரண்டு மூன்று மாதங்கள் முடிந்தபிறகுகூட பணம் கொடுப்பதில்லை. அந்தத் தாமதத்திற்கு என்ன காரணம்? அந்தத் தாமதத்தைத் தவிர்த்து, திருமணத்திற்கு 1 வாரம், அல்லது 10 நாட்களுக்கு முன்னதாகவே கேட்ட கடனைக் கொடுப்பதற்குரிய உத்தரவாதத்தை அந்த பி. எஃப். காரியாலயம் மூலமாக அளிக்க, அமைச்சர் முன் வந்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளை (Sentiments expressed by the Hon. Members) கருத்திலே கொண்டு, இன்றைய தினம் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமாகச் சொல்லி தாமதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பெண்கள் பணியாற்றும் தொழிலகங்களில் குழந்தைகள் காப்பகம் நிறுவும் திட்டம்.

*வினா எண். 134—**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகுக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்கள் பணியாற்றும் எல்லாத் தொழிலகங்களிலும் குழந்தைகள் காப்பகம் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தொழிற்சாலை சட்டத்தின் பிரிவு 48-ன்படி முப்பதும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவப்பட வேண்டும். அத்தகைய தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, 30 பெண் தொழிலாளர்களுக்கு மேலே இருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலும் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது விதிமுறையாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அப்படி எத்தனை தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன